**தலைப்பு 119 – மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் *அமைச்சினால்* வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் *அமைச்சின்* நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது மேலும் அதன் காரணமாக முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் இவ்வறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 299,538,945 ஆக இருந்துடன் திறைசேரி கணனி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 290,051,919 ஆக இருந்த காரணத்தினால் ரூபா 9,487,026 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். | வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மிக விரைவில் கணக்கீடு செய்யப்பட்டு சீராக்கம் செய்யட்டுள்ளதாக |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 891(1) இற்கு இணங்கும் வகையில் பிணை வைப்பு பதிவேடொன் பேணுவதற்கு நடவடிக்கை |

எடுக்கப்பட
வேண்டும்.

**1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் அரச செலவின முகாமைத்துவம்தொடர்பான சுற்றறிக்கை | அச்சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் அணி மற்றம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் ஆகக்கூடிய கூடிய வாகனங்களின் அளவு 03 ஆக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு இணங்காத வகையில் அமைச்சருக்காக 04 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் 23 ஆந் திகதி வரை மாத்திரம் 04 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தாகவும் அதன் பின்னர் சுற்றறிக்கையின் பிரகாரம் உரித்தான 03 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டதாக. |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவு | சட்டத்தின் உரிய பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை. | சட்டத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதாக |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநி தி மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கோரப்பட்ட கட்டுநிதி ரூபா 4,655,000 ஆக இருந்ததுடன் உள்ளவாறான கோரப்பட்ட கட்டுநிதி ரூபா 905,944,000 ஆக இருந்தது. அதன் பிரகார் கோரப்பட வேண்டிய கட்டுநிதி மற்றும் கோரப்பட்ட கட்டுநிதிக்கு இடையே 207 சதவீதமான விலகல் ஒன்ற அவதானிக்கப்பட்டது. மேலும் கோரப்பட்ட கட்டுநிதியிலருந்து ரூபா 757,448,330 மாத்திரம் திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்தது. | கட்டுநிதி தேவைப்பாடு சரியாக திட்டமிடப்பட வேண்டும். | கட்டுநிதி தேவைப்பாடு சரியாக திட்டமிடப்பட்டிருந்த போதும் கோரப்படும் மாதாந்த கட்டுநதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களததிடமிருந்து உரிய மாதத்திற்குள் விடுவிக்கப்படாமை காரணமாக இந்நிலைமை ஏற்படுவதை தவிர்க்க முடியாது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் பொது 04 செயற்திட்ட 04 செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 37,100,000 ஆன நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது இந்த 04 செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 16,914,000 தொகையான முழுமையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதற்காக மதிப்பீடு செய்வதில் பலவீனம் மற்றும் பெறுகை செயற்பாட்டின் தாமதங்கள் காரணமாக உள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கணக்காய்வு அறிக்கையின் விடயங்களுடன் இணங்குவதாக |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்திருந்த நிதி ஏற்பாடு சேமிப்பு 10 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சில் பரம்பியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட துடன் 14 செலவின விடயங்களுக்குரிய அவ்வாறு சேமிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளின் பெறுமதி ரூபா 136,933,133 ஆக இருந்தது. இதற்காக மதிப்பீடு செய்வதில் பலவீனங்கள் மற்றும் செயற்படுத்து வதில் தாமதங்கள் காரணங்களாக இருந்ததுன் நேர் செலவினம் கணக்கீடு செய்யும் முறைமையொன்று இல்லாமை காரணமாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | சேமிக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடுகளின் பெறுமதி ரூபா 136,933,133 என திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் நேரடி செலவினம் கணக்கீடு செய்தல் சரியாக செய்வதற்காக உரிய பிரிவு தெரியப்படுத்தப்பட்டு ள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் திறைசேரியால் கட்டுநிதி வழங்காமை காரணமாக இரண்டு செலவின விடயங்களுக்குரிய மொத்த நிதி ஏற்பாடுகளில் 26 சதவீதம் மற்றம் 57 சதவீதம் சேமிப்பொன்ற அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் இறுதி வரை தாமதிக்காமல் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும. | கணக்காய்வு அறிக்கையின் விடயங்களுடன் இணங்குவதாக |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 31 மெ.வொ. மொறகொல்ல நீர் மின்நிலைய நிர்மாணம் | | |
| 31 மெகா வொ் இயலளவுடனான தேசிய மின் முறைமைக்கு பெற்றுக்கொள்வதற்காக செயற்படுத்தப்படும் மொறகொல்ல நீர் மின்நிலைய நிர்மாணத்திற்கு உரிய செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 3 ஆண்டு கால தாமதத்துடன் இதன் வேலைத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்களை நிறைவேற்றம் வகையில் திட்டங்கள் முறையாக திட்டமிடப்பட்டு குறித்த கால சட்டகத்தில் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்தல் | செயற்திட்டத்தின் மதியரை செவைகள் ஒப்பந்தம் 02 ஆண்டுகள் அளவில் தாமதமடைந்தமை, சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை வழங்குதலில் தாமதம், ஆரம்ப வேலை ஒப்பந்தம் வழங்குவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் எதிர்பார்த்திருத்தல் போன்ற விடயங்கள் தாக்கமளித்தாகவும் 2023 |

| | | | |
|---|---|---|---|
| | ஆசிய அபிவிருத்தி வங்கயிடமிருந்து ரூபா 16,780 மில்லியன் தொகை கிடைத்திருந்ததுடன் இச்செயற்திட்டம் குறிக்கப்பட்ட திகதியில் உள்ளவாறு ஆரம்பிக்கப்படாமை காரணமாக பெற்றுக்கொண்ட கடன் தொகைக்காக ரூபா 28 மில்லியனிக்கு அண்மித்த தொகையொன்று (USD177,931) தணட்பணமாக) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | ஆம் ஆண்டின் போது அமுலாக்கு வதற்கு உள்ளதாகவும் |
| (ஆ) | தேசிய கோபுர மற்றம் விநியோக வலய அபிவிருத்தி மற்றம் மின்சக்தி செயற்திறன் அபிவிருத்தி செயற்திட்டம் | | |
| | இச்செயற்திட்டம் 2015 சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 சனவரி மாதம் முடிவடைவதற்குள் நிர்ணயிக்கப் பட்டிருந்த போதும் 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | இச்செயற்திட்டத்தின் மதியுரைக்காக விடயப்பரப்பு (JICA) நிறுவனத்துடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு தாமதமாகி யிருந்தது. அதன் பின்னர் ஒப்பந்தக்காரரின் முன் தகைமை (PQ) இற்காக JICA அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தாமதமானமை விடயங்கள் காரணங்களாக இருந்தது. |
| (இ) | 35 மொ.வொ புரொடலன்ஸ் நீர் மின்சார நிலைய செயற்திட்டம் | | |
| | இச்செயற்திட்டம் 2013 ஆகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆகஸ்ட் இல் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இதன் பௌதீக முன்னேற்றம் 66 மாத்திரமாக இருந்தது. தற்போது இச்செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 9,424 மில்லியனில் ரூபா 6,426 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | இச்செயற்திட்டத்திற்கு காணியொன்றை பெற்றுக் கொள்வதில் தாமதம், சமூக சிக்கல் உருவாகயிமை மற்றும் ICBC வங்கியால் நதி வழங்குவதை தறகாலிகமாக நிறுத்தியமை போன்ற விடயங்களால் செயற்திட்டம் தாமதமடைந்ததாக |
| (ஈ) | மன்னார் கோபுர வீதியின் உட்கட்டமைப்பு நிர்மாணம் லொட் ஏ : வவுனியா கிரீட் உப நிலையத்தை மேம்படுத்துதல் மற்றும் மன்னார் கிரீட் உபநிலைய நிர்மாணம் | | |
| | இச்செயற்திட்டம் 2013 ஆகஸ்ட்டில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆகஸ்ட் இல் | | மன்னார் தள உப நிலைய நிர்மாணததிற்கான பொதியின் |

| | |
|---|---|
| பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இதன் பௌதீக முன்னேற்றம் 84 சதவீதமாக இருந்தது. தற்போது இச்செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 4,149 மில்லியனில் ரூபா 2,507 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. | விடயப்பரப்பு, செயற்திட்டத்தின் கால எல்லைக்கு இடையே வேறுபாடு காரணமாக செயற்திட்டம் தாமதமான இருந்ததாகவும் |

### 3.2 அரச உத்தியோகத்தர்களின் பிணை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் அமைச்சின் காசு, வருமானம், முத்திரை அல்லது பொருட்களுக்கு பொறுப்பாக இருத்தல், அவ்வாறில்லாவிட்டால் பொருட்களை வழங்குதல் தொடர்பா நிர்வாக ரீதியாக பொறுப்புக்கூற வேண்டிய அல்லது அதிகாரத்தை கையளித்தலின் கீழ் அந்நவடிக்கைகள் கையளிப்பின் கீழ் அந்நடவடிக்கைகள் கையளிக்கப்படுவதாகவும் அல்லது உத்தியோகத்தர்களும் அமைச்சின் கணக்கிற்குரிய உறுதிச்சீட்டுக்கள், சான்றுறுதிப்படுத்தி காசோலை எழுதும் ஆட்களும் தனது கடமையை நியாமாக நிறைவேற்ற வேண்டுமென 612 ஆம் அதிகாரமான அரச உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 இன் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் அவ்வாறான பதவியொன்ற நியமிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு மாதங்களுக்குள் பிணை வைக்கப்பட வேண்டும். | 612 ஆம் அதிகாரமான அரச உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்கவும் நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைத்தல் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென |

**4. மனித வள முகாமைத்துவம்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) மீளாய்வாண்டின் இறுதி வரை பதவியணியில் 24 வெற்றிடங்கள் காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.** | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | **24 வெற்றிடங்கள் காணப்பட்டன** |
| **(ஆ)** 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் தொடர்பான சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் கௌரவ அமைச்சர்களுக்காக அல்லது பிரதி அமைச்சர்களுக்காக அரச கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதசிசட்ட நிறுவனமொனறின் உததியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டால் அவருக்கு அந்நிறுவகத்திலிருந்து பெற்றுக்கொண்ட சம்பளம் அல்லாமல் அவர் இணைக்கப்பட்ட பதவிக்குரிய சம்பளமேயாகும். எனினும் மேற்குறித்த சுற்றறிக்கைக்கு மரணாக அமைச்சினால் இலங்கை மத்திய வங்கியின் சாரதியொருவரின சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு அவருக்கு கூடிய சம்பளமொன்று அதாவது 2017 திசெம்பர் மாதத்திற்காக ரூபா 167,392 சம்பளமொன்ம் 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,834,801 ஆன சம்பளமொன்று அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்த அது மீள்நிரப்பப்ட்டிருந்தது. | | **அமைச்சரின் ஆலோசணையின் பிரகாரம் இணைக்கப்பட்டுள்ளார்.** |